உ

கடவுள் துணை.

# மருமக்கள் துயரம்

## திருப்புகழ் காவடிச்சிந்து.



761 / 1.21

க. சண்முக முதலியாரவர்களால்
இயற்றப்பட்டது.

பூ. து. மாசிலாமணிமுதலியாரால்
தமது
சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1920.

...ஸ்தர் செய்யப்பட்டது. அணா 2

C-, IMSICS, N
N20.
179249

உ

கடவுள் துணை.

# மருமக்கள் துயரம்

## திருப்புகழ் காவடிச்சிந்து.

இது,

கொரக்கோட்டை. ப. வடிவேலு செட்டியாரவர்கள் மாணாக்கர்

க. நாராயணசாமி முதலியாரென வழங்கும்

க. சண்முக முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

பூ. சு. துளசிங்க முதலியார் குமாரர்

பூ. து. மாசிலாமணி முதலியாரவர்களால்

தமது

சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

*Registered Copy Right.*

**1920**

நெ. 3-25, வல்லம் டங்காருசெட்டி வீதி வேப்பேரி போஸ்டு; மதராஸ.

உ

கடவுள் துணை.

# மருமக்கள் துயரம்

## திருப்புகழ் காவடிச்சிந்து.

### விநாயகர் துதி.

ஜப்தகலந்தரு என்ற வர்னமெட்டு.

கஜமுககணபதி யேவருவாய்
கதியுனையடைந்தே னருள்தருவாய்
தயவுளசிவசுங் கரியாலா
கஜமுகசூரனுயிர்க் கொருகாலா (கஜ)

வள்ளிமணாளன் சோதரனே
வல்லபைமருவுந் தயாபரனே
கள்ளமிலாதசி ரைங்கரனே
கருணைபுரிவாய் கிருபாகரனே (கரி)

போற்றிடுமடியார் புண்ணியனே
புலவர்கள்புகழுங் கண்ணியனே
ஆற்றுவாரின்றி நண்ணினனே
ஹரஹரசிவசிவ முஷிகனே (கஜ)

ஔவையர்க்கொரு தாயகமே
அண்டர்களுக்கொரு நாயகமே
தெய்வமேதீர்ப்பாய் என்பவமே
திருவடிபணிந்தேன் செண்பகமே (கஜ)

யேனின்னம்தாமதம் உயர்வேதா
யிரங்காதிருப்பது மென்நீதா
நான்விடமாட்டேன் கணநாதா
நாராயணசாமிப் பணிபாதா (கஜ)

## சுப்பிரமணியர் துதி.

எண்சீர்க்கழி னெடிலடி யாசிரிய சந்தவிருத்தம்.

வேதநான்கினி லோங்கும் பொருளுமாய்
வேதமோதுவ ருள்ளும் புறமுமாய்
காதலாகு மன்ப ருளத்தினிற்
காதலோடு கலந்தரு ளீய்ந்தவா
பேதையின்மன வள்ளலென் னுமிடி
பேதையேன் சரணம்புகுந் தேனுனை
தாதையே யெனைத் தாங்குஞ்சடாக்ஷர
சரஹணபவ சண்முகத் தெய்வமே

## ஸ்ரீமகாவிஷ்ணு துதி.

இலாவணி ராகம்.

பாடும்புலவர்நாவிற் கூடியேவிளையாடும்
பன்னகசயனனே — வாரும் வாரும்
நாடும்மறைபுகலும் நாராயணனேயுனை
நம்பிவந்தே னெனைக் — காரும் காரும்
பாண்டவர்க்கநுகூல பக்தரக்ஷகனே
பரதவித்துவந்தேன் — ஐயா ஐயா
வேண்டுங்கரிமுறைக் கிரங்கியேயாண்ட
வித்தகனே சங்காரு — கையா கையா
பந்தசம்சாரத்தை நிக்கித்தகற்றியுன்பால்
பற்றுதற்செய்வதெப்போ — கண்ணா கண்ணா
சிந்தாகுலம்தீர்த்துன் தாசர்கள்போலநீ
சேர்த்துக்கொள்ளுவதென்று — வண்ணா வண்ணா
பாராயணமுனை செய்வோர்க்கருள்தினம்
பாலித்திடும் பார் — தாமா தாமா
நாராயணசாமி நாளுமுனைபணிய
நாட்டமுன் கண்சீதா — ராமா ராமா

# கமலாம்பாள் துயரம்.

பாளைவாய் கமுகில் என்ற வர்ணமெட்டு.

1 என்மணியே கண்மணியே என்பிரிய சோதரியே
என்குறையைக் கேட்பவர்க ளாரம்மா இப்போ
துன்னிடத்துடைக்கின்றேன் கேளம்மா

2 தாலிகட்டின நாள்முதலாய்க் கூலியாளாய்வந்தடைந்தே
சாமியுங்கண்ணினால் பார்க்க வில்லையே யான்
சாருமளவும் நேர்ந்ததே தொல்லையே

3 எத்தனைவேலைசெய்தாலும் சொட்டுசொல்லாமலில்லை
சித்துகள்ளி மாமியாரும் பாவியே கூடச்
சேர்ந்தநாத்தி மார்கள்ரெண்டும் தோஷியே

4 சேலைநல்லதாகக்கட்டி வாரிசீவினால்தலையை
சோரநாயகனைத்தேட வந்தவள் யென்று
கோரமாகவேதிட்டிப் பேசுவள்

5 கேவலமானநகையை ஆவலாயணிந்திட்டாலும்
பாவிமாமியின்மனம் பொறுமையே நீங்கி
மாவையானிருந்தாலுங் கோராமையே

6 போடுவதுகாதினில் துடப்பச்சுப்பலல்லால்வேறு
பூஷணங்கள் போடமனந் தாளாள் எந்தன்
புருடனிடம்பேசமனங் கோறாள்

7 தந்தைதாயைகாணுதற்கு தாயகம்போய்வாரேனென்றால்
வந்துதம்மா அன்றைக்கேதான் தீம்பு மிக
நொந்துவிடுமேயழுப்பைக் காம்பு

8 கொண்டவன்பிடித்ததொரு கூத்தியாரின்நேசத்தாலே
கண்டுயென்னிடம் பேசுவ தில்லை நானே
கண்டுபேசினாலும்வரும் தொல்லை

9 நாராயணசாமிதமிழ் நாட்டிலுள்ளமாமிகளும்
சீராய்தெரிந்தேநடப் பார்கள் இந்த
சீமையில் நல்லப்பேரெடுப் பார்கள்

# இரண்டாவது

# காந்திமதி துயரம்.

## கும்மி.

உத்தமியான கமலாம்பாளே
யோதியசஞ்சல மெலாங்கேட்டேன்
சித்தமெனக்குங் கலங்குதம்மா-அதை
செவியினிற் கேட்கவுங்கூசுதம்மா. 1

நங்கையேநீயும் புலம்புகிறாய்-அது
நாட்டினிலெங்கும வழக்கமம்மா
எங்கள்குறையை கூறவென்றால்-இந்த
கங்குல்விடிந்திடுங் கேளுமம்மா. 2

உந்தன்குறையோ சிறிதாகும்-யான்
ஓதினாலென்குறை மேலாகும்
உந்தன்வீட்டில்மாமி யொன்றாகும்-எனக்
குற்றமாமிகள் மூன்றாகும். 3

போதாக்குறைக்கு பொன்னியம்மன்குறை
போலவேநாத்திகள ரெண்டுமுண்டு
பாக்கியாகிய ஓரகத்திமார்கள்-சுற்றி
பற்றியேநான்குபேர் உண்டெனக்கு 4

இத்தனைபேருக்கும் மத்தியிலே-இந்த
யேழையொருத்தி இளைத்தவளே
புத்திகெட்ட இந்த மாமிநாத்திகளால்-என்
சித்தங்கலங்குது கண்மணியே. 5

கல்யாணத்திற்குப்பெண் கேழ்க்கயிலே-என்
கண்போலேபார்ப்பே னென்றேயுரைத்து
வில்லங்கமிப்படி பின்னாலேசெய்கின்ற
விபரீதமென்சொல்வேன் சோதரியே, 6

காலையிலேமணி நாலாகும்-பின்னால்
மாலையிலேமணி பத்தாகும்-வீட்டு

வேலைகளை யா ளெண்டியாய்ச்செய்து
வந்தாலும்வீண்சண்டை செய்வார்கள் 9

நாயகன்சற்று முகங்கொடுத்து-கூட
நல்லவார்த்தைகளைப் பேசிவிட்டால்
யேனடிபையனுக்கே மருந்துகொஞ்சம்
யேற்றிவிட்டாயென்று தூற்றிடுவார். 8

உடலைகுளிக்கவு மாகாது-நல்ல
உடையைதரிக்கவும காது
மடச்சிகுளிக்கவும் நீரிலையேயென்று
மன்னவனேசுரார் என்னசெய்வேன் 9

179249

சில்லரைநகையை போட்டாலும்-மாமி
தாசியோடியென்று மொத்துகிறாள்
இல்லாதும்பொல்லாதும் மன்னவன்வந்தபின்
யேற்றிடுவாள் தெருத்திண்ணையிலே. 10

முன்னும்பின்னும் அறியானேபாவி-பெரும்
முறட்டுத்தடியை யெடுப்பானே
சின்னபின்னமா யடிப்பானே-ஏ? ந்தன்
ஜீவனும்போய்விடும் என்னசெய்வேன். 11

ஆதியில்தந்தை யோதிவைத்ததமிழ்
ஆதரவாலேயின் னல்லபுத்தி
நீதியுங்கண்டதால் நின்றவர்களோடு
வாதுகள்செய்யவுங் கூசதம்மா. 12

வம்புந்தும்புமாக பேசுவாளேநாத்தி
வாய்மேலிடிப்பாளே ஓரகத்தி
தாம்புகயராலே மாட்டுவாளேமாமி
துரத்தியடிப்பாரே மூத்தாரும் 13

யெத்தனையோதொல்லை யெத்தனையோதுன்பம்
மெத்தப்பொறுத்தே யிருந்தாலும்
அத்தனைக்குமெந்தன் நாயகனுனவர்
சற்றுங்கவனியா ரென்னசொல்வேன் 14

மாமியாருக்கேவாய் மாயவரம்-சிறு
நாத்திகளுக்கோவாய் நாகப்பட்டணம்

சாமியாராகிய ஓரகத்திக்குவாய்
சமுத்திரம்போல யிருக்குதம்மா. 15

கோரமையாகிய-மாமியர்நாத்தியர்
கூவிலிருந்தென்ன பாவியர்கள்
நாராயணசாமி பாட்டைப்படித்தேனும்
நல்லவழிவரவேணுமம்மா. 16

---

## மூன்றாவது

# பத்மாவதியின் துயரம்

## நொண்டிச்சிந்து.

கமல்முகவதன-எந்தன்
காந்திமதியெனும் காரிழையே
பொழுதுவிடியுமுன்னே-எழுந்து
பெருக்கிடவேணும்வீடு மெழுகிப்பின்னே
கோலங்களிடவேணும்-பாத்திர
கூட்டமெடுத்து துலக்கிடவேணும்
மாட்டுக்கொட்டையடுத்து-சாணியை
வாரியுருட்டியெரு தட்டவேணும்
பசுவையவிழ்க்கவேணும்-நிறுத்தி
பால்தனை குடுவையில் கறக்கவேணும்
தயிரைக்கடையவேண்டும்-அது
தரும்வெண்ணையையுரியில் வைக்கவேணும்
நெய்யையுருக்கவேணும்-கிணற்று
நீர்களைகொண்டுவந்து சேர்க்கவேணும்
மிளகாயரைக்கவேண்டும்-அதன்
முன்னதாய்சாதம் சமைக்கவேண்டும்
பலவிதகாய்கறிகள்-ருசிகர
பாங்குடனேசமைத்து முடிக்கவேண்டும்
மாமன்மாமிபுருஷன்-கொழுநன்
மற்றவர்க்கும்வென்னீர்வைத்து தரவேணும்

சாதம்பரிமாறவேணும்-உடனே
தாம்பூலங்கொடுத்து விசிறிடவேணும்
அவர்களுடுத்துமாடையை-எடுத்து
அடுக்காய்த்தோய்த்துலர்த்தி வைக்கவேண்டும்
இத்தனைவேலையெல்லாம்-யான்
ஒருத்தியேசெய்து தொலைத்திடவேண்டும்
இதற்குள்ளேநல்லமணிதான்-நாலரை
யாகிவிடும்வேலையினா லலுத்துவந்தால்
இதுசொத்தை அதுசொள்ளையென்று
எழுந்திருப்பாள்மாமி நாத்தியுமே
சண்டைக்கிநிற்கவேண்டும்-இல்லாவிடில்
தானேவலியவந்து மயிர்பிடிப்பாள்
கொழுநன்தடியெடுப்பான்-உடனே
கூசாமல்மூத்தார்க ளுதைகொடுப்பார்
நாத்திமுறமெடுப்பாள்-இந்த
நாலுபேர்நடுவில் நசுங்கிடுவேன்
அடியோபோய்விட்டதா-கூட
ஆத்தாளையு அக்காளையும் வலித்துக்கொள்வார்
பாடுயித்தனைகள்பட்டும்-நல்ல
பேறுண்டாவயிறார சோறுமுண்டா
கட்டத்துணியுமுண்டா-கையில்
காசியுண்டாநகை தூசியுண்டா
கந்தையேனுங்கசக்கி-உடலை
கழுவியேமஞ்சளொடு குங்குமமிட்டு
தலைதனைசீவிவாரி-புஷ்பம்
சாற்றிக்கொண்டால்மாமி பார்த்திடுவாள்
தேவடியாள்வீதிதேடி-உடனே
செல்லடியிந்தவேஷம் செல்லுமென்பாள்
உடனேகலைக்கவேணும்-இல்லாவிட்டால்
ஓட்டியோட்டியடிப்பாள் சாட்டிக்கோலாலே
பாவியான்படுந்துயரம்-உலகில்
பார்ப்பாருமில்லையிதைக் கேழ்ப்பாருமில்லை
முன்னால்செய்த வினையோ-இப்படி
மூண்டதம்மாவெனக்கு நேர்ந்ததம்மா

யிசனின்யெழுத்தாமோ-இங்கு
யேங்குகிறேன்மனந் தேங்குகிறேன்
நாராயணசாமி-எழுதிய
நீதியறிந்தேமாமிகள் தானடப்பார்
எடகூடமாமிகழுதை-இதனை
என்னமோஎழுதிவைத்தா னென்றுயேசுவார்
தூஷணைசெய்யவில்லை-இந்த
தொல்லுலகில்நடப்பதை தொகுத்துரைத்தேன்
தந்தினம் தன தந்தினம்.

## நான்காவது

## மயிலாப்பூர்

# மாகதவல்லிதுயரம்

ஆறுமுகவடிவேலவனே என்ற வர்னமெட்டு.

என்குறையுன்னிடம் சொல்லாமலேயான்
யாரிடம்சொல்வே னம்மா முன்னே
நன்னயநகரந் தன்னிற்பிறந்திந்த
நாட்டினில்வந்தே னம்மா
பட்டிடுங்கஷ்டத்தை கூறுகிலுஞ்சொல்ல
பாரமாய்தோணு தம்மா மாட்டு
கொட்டாயிற்சாணியை நாலுமணிக்குள்ளே
கொண்டுவரவேணு மம்மா
வீட்டைமெழுகியே பாத்திரம்விளக்க
விடியும்பொழு தாகும் பயிர்
விளைக்குங்கணவனுக்கே கஞ்சிகொண்டுபோய்
சேர்க்கப்பக லாகும்
அத்திகோடுபோயிற்று கூடக்களைநாற்று
யானுமநட வேணும் களை
யாயிவிட்ட தும்பின் வீடடைந்துகஞ்சி
யன்னம்கொள்ள வேண்டும்

அரைத்திடவேண்டும் கேழ்வரகும்நெல்லை
யவித்துக் குத்த வேண்டும் . அதை
ஆற்றிப்புடைத்து தாத்தியுலையிட்டு
அன்னஞ்சமைக்க வேண்டும்

வந்தவேளையிது நல்லவேளை என்ற வர்னமெட்டு.

உப்பில்லையென்று உதைப்பான்புருஷன்
ஒளிந்தாலும்மாமி வெளியேதள்ளுவாள்
எப்படிசெய்தாலும் குற்றமென்சற்றும்
இருக்காமலிருக்காது யேந்திழையே

இப்படிக்கொத்த வெகுமதியும்பட்டு
செப்பாமலன்னத்தை யுண்ணுவிட்டு
எப்போதும்போல பாத்திரம்துலக்கி
இருக்கவேணும்இந்தப் பாவியுமே

ஒருவேலைசெய்யும் போதேஓரகத்தி
இன்னொருவேலை செய்யவில்லையென்பாள்
தடிச்சிறுக்கியென்றும் தட்டுவாணியென்றும்
சார்ந்தாப்போல்சொல்லுவாள் நாத்தியரும்

படுபாவிநாத்தியரும் சமயங்கள்பார்த்துமே
பார்த்தாப்போலத் தாயிடக்கோளுரைத்தால் அந்த
தடிநாரிபெந்தன் மயிரைப்பிடித்திழுத்து
ஜாடுவாளெந்தனுயிர் சாகுமட்டும்

என்னசெய்தேனான் ஏதுசெய்தேனான்
இப்படியடிக்கிறா யென்றுகேட்டால்
என்னடிசிறுக்கி யெதிர்க்கிறாயென்று
யேற்றுவார்கோள்கள் புருஷனுக்கே

அந்தப்படுபாவி சற்றுங்கவனியாமல்
அடிப்பான்தாத்துக்கோல் முறியும்படி
எந்தவிதத்திலும் என்னால்பொறுக்காமல்
ஏந்திழையேவந்தேன் தாய்வீட்டிற்கே

## ஐந்தாவது

# மீனாம்பாள் துயரம்.

## புலம்பல்.

பட்டணந்தனிற்பிறந்து பட்டிக்காட்டில்வாழ்க்கைப்பட்டேன்
பட்டகுறையுந்தனிடம் பாவியானுரைக்கிறேன்கேள்
தோழியே பிரிய தோழியே

வேலைசெய்யும்போதுநாளும் தாளாமல்சற்றுநின்றால்
ஏனடிதடிச்சிறுக்கி மரமோநீயுமென்பாள்மாமி
தோழியே பிரிய தோழியே

அப்புரம்சமையல்தனை யொப்புடன்செய்யவேசென்றால்
அடுப்புக்குழிடுப்புநீயும் பிடிக்கிறாயோயென்பாள்மாமி
தோழியே பிரிய தோழியே

வேறுவேலைசெய்திடவே போனாலும்ஓரகத்தியாள்
வேலைவிட்டுசிரைத்திடும் வேலைசெய்கிறாயோவென்பாள்
தோழியே பிரிய தோழியே

வேலைகள்முடிந்தபின்பு வேறுவேலையில்லையென்றுசொல்லி
காலம்போகபுஸ்தகத்தை காதலோடுவாசித்தாலும்
தோழியே பிரிய தோழியே

பாகபண்ணிவேலைக்குப்போய் ரூபாய்கொண்டுவருகுராயோ
சீச்சீயெத்துயெரிந்துவிட்டு வேலைசெய்யடியென்பாள்மாமி
தோழியே பிரிய தோழியே

அழுக்குடையதிரைகமதைக் குளிக்கலாமென்றுபோனால்
திடுக்கெனவெழுந்துமாமி மினுக்குறாய்என்பாளென்னை
தோழியே பிரிய தோழியே

மாலையில்முகங்கழுவி சீலமாகபொட்டிட்டாலே
ஏனடிபட்டணத்துதட்டுக்கும் ஓர்பொட்டோயென்பார்
தோழியே பிரிய தோழியே

கூந்தலைச்சீவினாலும் கூந்தலழகியோவென்பார்கள்
இந்ததுக்கங்களையாலும் எந்தவிதமாய்ப்பொறுப்பேன்
தோழியே பிரிய தோழியே

நல்லசேலையையெடுத்து நாடியேகட்டத்துணிந்தால்
சல்லாபாவாகட்டும் தாசியோவென்பாள்நாத்தி
தோழியே பிரிய தோழியே

இந்தமாமியால்துயரமிப்படி பொருபக்கமிருக்க
சொந்தமாகியபுருஷனல் படுந்துன்பமும்கொஞ்சம்புகல்வேன்
தோழியே பிரிய தோழியே

மாமிசெய்யும்கொடுமையெல்லாம் மன்னவரிடமுரைத்தால்
ஏனடி-டியாப்-நான்ஸன்ஸ்என்று எட்டியேஉதைக்கவாரார்
தோழியே பிரிய தோழியே

காலையிலெழுந்துமுகம் கழுவிபேகுங்குமமிட்டு-மற்ற
வேலையையின்னல்செய்யக் கூடாதாயென்பார்புருஷன்
தோழியே பிரிய தோழியே

பார்க்கும்போதெல்லாம்பெரும் பாடையைப்போலிருக்குறுயே
தேகத்தைக்கழுவிநல்ல சேலையைக்கட்டடியென்பார்
தோழியே பிரிய தோழியே

இப்படிக்கொத்தசமயம் செப்பிடில்வீட்டுன்குறையை
தப்பிலியென்காதிலிதனைப் போடா நீபோடியென்பார்
தோழியே பிரிய தோழியே

ஆறுவது

# உபயாவின் துயரம்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்குறையை சற்றேகேளம்மா - அடிசோதரியே
என்குறையை சற்றேகேளம்மா

அநுபல்லவி.

முன்னமெந்தன் தலையிலெழுதி முடிஞனேபிர்மதேவன்
அன்னைசெய்ததவப்பயனோ யறிகிலேனானென்னசெய்வேன்

சரணங்கள்.

அத்தைபென்றுயென்னையுங் கொடுத்தார்-மகள்போலவே
ஆதரிப்பாளென்றுமே விடுத்தார்-பெரியபெரிய
மெத்தைமேடைவீடெனப்பார்த்தார்-கொடுத்துவிட்டால்
மேன்மைபெறுவாளென்றுமே சேர்த்தார்
சித்துக்காரமாமியவா செய்யுங்கொடுமையறிவதாரு
சித்தமுங்கலங்குதையோ சிவமேசிவமேசிவமேயின்று எ

நாத்திவார்த்தைமேன்மையாய் கேழ்ப்பாள்-மாமிமுண்டை
நாயைப்போலெனைசீறியே விழுவாள்-உள்ளேசென்றால்
சோத்துப்பானையை மொட்டையேயடிப்பாள்-துண்ணுவி
தூக்கிபோட்டுதலையிலேயுடைப்பாள்-அந்த [ட்டால்
கூத்துகளைசொல்லவென்றால் கூசுதேயென்னுவுமெத்த
பார்த்திருந்துஎன்னைப்பெற்றோர் பாழ்கிணறதில்தள்ளினரே

நாயகனிதைபார்க்கேனென்குரார்-சொன்னபோது
நாரிபோடிஎன்றேதிட்டுரார்-சகியாவிட்டால்
தாயகத்திற்கேகச்சொல்குரார்-இல்லாவிட்டால்
சாவடியுன்கதியீதென்குரார்
பாரிலெக்தன்விதியுமிந்தப் படியெனக்குநேர்ந்ததம்மா
நாராயணன்தமிழால் நமக்குமீசன்துணையிருப்பார் எ

---

## எழாவது

# புஷ்பவல்லியின் துயரம்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிசம்சாரம்செய்குவேன்-உன்னம்மையுடன்
எவ்விதங்காலங்கழித்திடுவேன்

அநுபல்லவி.

எப்படிசம்சாரம்செய்குவேன் சொற்படிசெய்துவந்தாலும்
தப்படிதப்படியென்று தாறுமாறாயேசுரார்களே எ

சரணங்கள்.

நாதரேநீர்சொல்லக்கேட்டிடும்-எந்தன்மாமி
நயவஞ்சகம் தன்னைப்பார்த்திடும்
ஆதரவுயில்லையென்று ஆனமட்டும்பேசுரார்கள்
காதலாஉந்தனைவிட கதியொன்றுமில்லையெனக்கு எ

பாவிமாமிசெய்யும் நடத்தையும்-அத்துடன்கூட
நாத்தியவர்செய்யும் நடத்தையும்
பாவியென்னைதாலிகட்டி ஆவியையவர்கையில்விட்டு
சாவுதற்கோகொண்டுவந்தாய் சரியல்லவுந்தனுக்கு எ

என்னபாடு படுத்திவிட்டாலும்-எனதுயிரை
எமனிடம்விட்டு விட்டாலும்
சின்னதனமானவார்த்தை சீமைசிரிக்ககேழ்க்கமாட்டேன்
மன்னவரேவுந்தனிட மலரடிசாட்சியாக எ

ஆகிகாலையிலெழுந்திருந்துமே-அவர்களுக்கு
அன்புடன்பணிசெய்ய வேணுமே
பாதியிரவுஆனமட்டும் பரிந்துவேலையைசெய்துவிட்டு
சாதமில்லாமல்யானும் சாகிறதோசொல்லிடுவீர் எ

மாட்டுத்தொழுவங் கூட்டவேணுமே-அங்கு
மட்டியைப்போல் உழலவேணுமே
ஆட்டைஅவிழ்த்துஓட்டி விட்டு மாட்டுசாணந்தட்டிவிட்டி
காட்டுகட்டையைகொண்டுவந்தால் கழுதைகழுதையென்கிறார்

வேலைசெய்துஅலுத்து நின்றாலே-உந்தன்தங்கை
நாயைப்போலவிழுகின்றாளே
காலைமுதல்வேலைசெய்து மாலைகளைத்துநானிருந்தால்
ஜாலமெல்லாமிங்குசெல்லாது சல்திநடநடவென்கிறார் எ

வீட்டுவேலைகளாச்சுதோவென்பார்-அத்துடன்கூட
விழிப்புவஸ்திரம் துவைத்தியோ வென்பார்
மாலைக்காலகுளியல்முதல் மஞ்சளெண்ணையைநான்மறந்து
ஆளைப்போலஉழைத்திட ஆச்சுதோதலைவிதியே எ

பாரிலிக்தப்படிநடந்திடுமோ-இந்தப்
பாவியிப்படிஅடையவந்திடுமோ
சீரிலகுநாராயண சாமிதமிழாலுரைத்தேன்
திண்டுவீரோவெட்டுவீரோ குத்துவீரோகொள்ளுவீரோ எ

## மருமக்கள் துயரம்

திருப்புகழ் காவடிச்சிந்து

முற்றிற்று.

---

# பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

## வாதக்கோவை.

அனேகமனிதர்களுக்கு இரசவாதஞ் செய்வதில் விருப்ப முண்டு அந்த விருப்பத்தின்படியே அதைச்செய்து முடித்துக் கொள்ள எவ்வளவோ திரவியங்கள் வீணே செலவாகின்றன ஆகையால் அப்படி திரவியநஷ்டம் வராதபடி கற்றுக்கொண்டு செய்துபார்க்க ஸ்ரீஅகத்தியமுனிவர் முதலியோர் திருவாய்மல ர்ந்த இரசவாதங்களையெல்லாம் ஒன்றாய்த்திரட்டி பொழிப்பு யெழுதி யாவருக்கும் பயன்படும்படி நல்ல உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது. புத்தகம் 1-க்கு விலை அணா-12

# ஸ்ரீராமகோடி

இந்த ராமகோடி என்னும்புத்தகத்தில் ஸ்ரீராமநாமத்தை உச்சரிக்கும் விதமும் அதனால் உண்டாகும்பலனும் ஸ்ரீராமநா மமகிமையும் பஞ்சாட்சரம் அஷ்டாட்சரம் என்னும் மகாமகி மைபொருந்தியதென்று சித்தர்களெல்லாம்இதன்பெருமையை புகழ்ந்திருப்பதும் விபரம் விபரமாகக் கண்டிருக்கிறது. இந்த ஸ்ரீராமகோடி என்னும் புத்தகத்தில் இருக்கும் மந்திரத்தை பிரதிதினம் ஜபித்துபூசையில் வைத்து திரிகரண சுத்தியோடு பூசிப்பவர்களுக்கு புத்திர சந்தானமும், உத்தியோக விருத்தி யும், வியாபாரப்பெருக்கும், தனசம்பத்தும், கற்பக விருக்ஷம் போல் உண்டாகும். யோகம், ஞானம் முதலானதும் கைகூடு மென்பது திண்ணம் இப்புத்தகம் உயர்ந்த கடிதத்தில் அச்சி ட்டு பட்டுகட்டடம் செய்திருக்கிறது விலை ரூபா-2

# நூதன புத்தக விளம்பரம்.

## ஸ்திரீபுருஷ லக்ஷணக்குறி சாஸ்திரம்.

இந்த ஸ்திரீ புருஷ லக்ஷணக்குறி சாஸ்திரமென்னும் கைகண்ட சாஸ்திரமானது உள்ளங்கால் முதற்கொண்டு உச்சிவரையிலுமுண்டான அவயவங்களின் உருப்புகள் ஒவ்வொன்றிற்கும் இம்மாதிரியிருந்தால் இன்னின்ன பலன் என்றும் அஸ்தமாகிய கைகளின்ரேகையின் அஸ்தக்குறிப்பும், பிள்ளை, பெண், தாரம், இத்தனையென்ற விபரமாக ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் வெவ்வேறு தெரிந்துக்கொள்ளும்படிக்கு புதைநிதியம்போல் கிடைத்து யாவருக்கும் உபயோகமாகும்படி திக்கு கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0 12 0

## அனுபோக ஜாதகரகசியம்

இந்த அனுபோக ஜாதகரகசியமென்னும் கைகண்ட சாஸ்திரமானது புதை நிதியம்போல் கிடைத்து அச்சிட்டரங்கேற்றி யாவரும் கையாண்டு வருமாறு வெளிவந்திருக்கின்றமையால் இந்நூலைக் கண்ணுற்ற நண்பர்களியாவரும் சோதிடரை விரும்பாமல் ஜாதகம் குறிப்பு, லக்கினம், கோசாரபலன் முதலிய எல்லா நன்மை துன்மைகளையும் தாங்களே அறிந்துக் கொள்ளலாம் அன்றியும் ஸ்திரீகள் ஜாதகமும் அடங்கியிருக்கின்றது உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு புல்பயிண்டு செய்திருக்கிறது இதன் விலை அணா 0 12 0

## மஸ்தான் சாகிபு பாடல்

மூலமும்-உரையும்.

மகாமகிமைபொருந்திய மஸ்தான் சாகிபு பாடலுக்கு மூலமும் பொழிப்புரையும் இல்லாததினால் சிலபெரியோர்கள் கேட்டுக்கொண்டதினால் உரையெழுதி உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறேன் இதைவாங்கி வாசிப்போர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் முதலியவைகளையும் சன்மார்க்கத்தையும் சர்வேஸ்வரனிடத்துள்ள அன்பையும் பெறுவார்கள் ஆனதுபற்றி ஒவ்வொரு மதஸ்தரும் இதை வாங்கிப்படிக்கவேண்டியது முக்கியம்

கிளேஸ்கடிதம் உயர்ந்ததிப்பு புல் காலிகோபயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூபா 3 0 0

---

பூ. து. மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாசம் பிரஸ்

நெ. 3-25, வல்லம் பங்காருசெட்டி வீதி வேப்பேரி போஸ்டு, மதராஸ்.